## பாதுகாப்பு உரிமை

பாதுகாப்பு உரிமை என்பது பிள்ளைகள் மீதான உங்கள் இருவரின் சட்டரீதியான பாதுகாப்பு உரிமை. இது இருபாலருக்கும் சமமானது ஆகும். எனவே உங்கள் இருவரில் யாரேனும் ஒருவர் பிள்ளைகளின் அடையாள அட்டை, பாஸ்போர்ட், பள்ளிக்கூடம் போன்றவற்றிக்கு மனு செய்யலாம்.

## 3 மணவாழ்க்கைச் சொத்துகள்

உங்கள் மணவாழ்க்கைச் சொத்துகளைப் பங்கு பிரிக்கும்போது நீதிமன்றம் கீழ்காண்பவற்றைக் கவனத்தில் கொள்ளும்.

- குறிப்பிட்ட சொத்தைப் பெறுவதில் நீங்களும் உங்கள் கணவரும் செலுத்தியப் பணம், அது போக நீங்கள் ஓர் இல்லத்தரசியாக இருந்து நீங்கள் ஆற்றிய பங்கும் கணக்கில் கொள்ளப்படும்.
- உங்கள் குடும்ப நலனுக்காக வாங்கியக் கடனைத் திருப்பிச் செலுத்தும் பொறுப்பை யார் ஏற்றிருக்கிறார்கள்.


Women's Centre for Change

பெண்கள் மறுமலர்ச்சி நிலையம்

241 Jalan Burma, 10350 Penang

Tel: 04-228 0342 / 011-3108 4001

04-398 8340 / 016-439 0698

e-mail : wcc@wccpenang.org

website : www.wccpenang.org


## விவாகரத்துக்கு முந்திய ஜீவனாம்சம்

- நீங்கள் உங்கள் கணவரை விவாகரத்து செய்யாத நிலையில், குடும்பத்திற்குத் தேவையான செலவினை உங்கள் கணவர் ஏற்கத் தவறினால், நீதிமன்றம் மூலமாக உங்கள் (நீங்கள் மற்றும் பிள்ளைகள்) தேவைகளுக்கான செலவுத் தொகையைத் கோரலாம்.
- அந்த செலவுத்தொகை உங்கள் கணவரின் சக்திக்கேற்ப முடிவு செய்யப்படும்.
- இச்செலவுத் தொகை, உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் உங்கள் கணவர் கொடுக்கத் தவறிய காலக் கட்டத்திலிருந்து கணக்கிடப் படும்.
- உங்கள் கணவர் ஓர் ஊழியராக இருக்கும் பட்சத்தில் நீங்கள் அவர் சம்பளத்திலிருந்து அத்தொகையை வெட்டி நேரடியாக உங்களுக்கு அனுப்பிவைக்கும்படி அவர் முதலாளியைக் கேட்டுக்கொள்ளலாம்.
- நீங்கள் வேறோர் ஆடவருடன் குடும்பம் நடத்தினாலோ அல்லது சரியான காரணமின்றி உங்கள் கணவருடன் குடும்பம் நடத்த மறுத்தாலோ உங்களுக்கான ஜீவனாம்ச தொகை நிறுத்தப்படும்.
- ஒரு வேளை உங்கள் திருமணம், சட்டப்படிச் செல்லாததாக இருப்பினும் உங்கள் பிள்ளைகள் அவர்கள் தந்தையிடமிருந்து செலவுத்தொகை பெற உரிமையுடையவர்களே. ஆனால் உங்களுக்குத்தான் அந்த உரிமை இல்லாது போய்விடும்.

Women's Centre for Change

மாதர்களே, சட்டரீதியாக உங்கள் உரிமைகளை உங்களுக்குத் தெரியப் படுத்தும் நோக்கத்துடன் பெண்கள் மறுமலர்ச்சி நிலையம், கையேடுகளை தயார் செய்து உள்ளது.

இந்தக் கையேடு இதைப்பற்றியது

# விவாகரத்து ஜீவனாம்சம்

### (முஸ்லிம் அல்லாதவருக்கு)

**பெண்களே உங்களுக்குத் தெரியுமா ?**

## விவாகரத்து

**விவாகரத்துக்கு ஒரே காரணம் தான் இருக்கமுடியும். உங்கள் மணவாழ்வு முறிந்துவிட்டது இனி அதை சீர்செய்ய முடியாது என்ற நிலை மட்டுமே விவாகரத்துக்கு காரணமாக இருக்க முடியும். கீழ்காண்பவற்றில் ஏதேனும் ஒன்றை நீங்கள் நிருபிக்கவேண்டும்.**

1. உங்கள் கணவர் துரோகமிழைத்திருந்து உங்களால் இனி அவரைச் சகித்துக் கொண்டு வாழமுடியாத நிலை.

2. உங்கள் கணவரின் செய்கையினால், அவரோடு நீங்கள் இயல்பாக வாழமுடியாத நிலை.

3. நீங்கள் உங்கள் விவாகரத்து மனுவை சமர்ப்பிப்பதற்கு முன்னால் உங்கள் கணவர் தொடர்ந்து இரண்டு வருடங்களுக்கு உங்களை நிரந்தரமாக விட்டுச் சென்றிருந்தால்.

4. நீங்கள் உங்கள் விவாகரத்து மனுவை சமர்ப்பிப்பதற்கு முன்னால் நீங்களும் உங்கள் கணவரும் தொடர்ந்து இரண்டு வருடங்களுக்கு விலகி வாழ்ந்திருந்தால்.

- இப்பொழுது எல்லாத் திருமணங்களையும் பதிவு செய்யவேண்டும்.
- நீங்கள் 1. மார்ச் 1982க்கு முன்னால் பாரம்பரியப் படியோ அல்லது சம்பிரதாயப்படியோ திருமணம் செய்திருந்தால் அதுவும் செல்லத்தக்கதேயாகும் என்பதோடு பதிவு செய்ததாகவும் கருதப்படும்.

ஆனால், 1. மார்ச் 1982க்குப் பிறகு எல்லாத் திருமணங்களும் கட்டாயம் பதிவு செய்யப் பட்டிருக்க வேண்டும். இல்லையென்றால் உங்கள் திருமணம் செல்லாது.

உங்கள் கணவரிடமிருந்து பிரியவேண்டுமென்றால், நீங்கள் விவாகரத்து கோர வேண்டியதில்லை. ஆனால் உங்களுக்கு பிள்ளைகள் இருந்தால் அவர்கள் சட்டத்துக்குப் புறம்பாக பிறந்தவர்களாக கருதப்படுவார்கள்.

# 2 வகையான விவாகரத்து முறை உண்டு

1. **இணைந்து தாக்கல் செய்வது**

- நீங்களும் உங்கள் கணவரும் விவாகரத்துக்-கான எல்லா நிபந்தனைகளையும் ஒப்புக் கொள்ள வேண்டும்.
- உங்கள் விவாகரத்துக் கோரிக்கை படிக்கப்-படும் அன்று நீங்களும் உங்கள் கணவரும் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும்.
- இம்முறையிலான விவாகரத்து அதிகச் செலவில்லாமல் விரைவானதும் எளிமை-யானதுமாகும்

2. **விவாகரத்துக்குரிய விவாகரத்து மனு**

- ஒருவேளை உங்கள் விவாகரத்து மனு தொடர் பாக உங்கள் கணவர் விவாதத்தைக் கிளப்பி-னால் நீங்கள் (வாதி) உங்கள் கணவர் (பிரதிவாதி) மீதான எல்லா குற்றச்சாட்டுகளை-யும் நிரூபிக்க வேண்டியிருக்கும்.
- நீதிமன்ற விவாதம் தொடங்குவதற்கு முன் நீங்கள் உங்கள் வட்டாரத்தைச் சேர்ந்த திருமண பதிவுக் குழுவினரைச் சந்திக்க முன் னேற்பாடு செய்துக்கொள்ள வேண்டும். அந்தச் சந்திப்புத் தேதியில் நீங்களும் உங்கள் கணவரும் அவர்களைச் சந்திக்கவேண்டும். அக்குழுவினர் உங்கள் மண வாழ்க்கையை சீர்செய்ய முயலுவார்கள். அதில் அவர்கள் தோல்வி கண்டால் உங்களுக்கு ஒரு சான்றிதழ் வழங்குவார்கள். அச்சான்றிதழைக் கொண்டு நீங்கள் உங்கள் விவாகரத்து மனுவை நீதி-மன்றத்தில் தாக்கல் செய்யலாம்.

# விவாகரத்தில் கவனிக்க வேண்டிய முக்கிய 3 அம்சங்கள்

**1. ஜீவனாம்சம்**

உங்கள் கணவர் உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் தரும் பணம்.

**2. பிள்ளைகள்**

அ) பொறுப்பேற்கும் உரிமை :
உங்கள் பிள்ளைகள் மீதான புற பாதுகாப்பும் உரிமையும் இதில் அடங்கும்.

ஆ) பாதுகாப்பு உரிமை :
உங்கள் பிள்ளைகள் மீதான சட்ட ரீதியான உரிமைகள் இதில் அடங்கும்.

**3. மணவாழ்க்கைச் சொத்துகள்**

உங்கள் மணவாழ்கையில் நீங்களும் உங்கள் கணவரும் பெற்ற (உதாரணமாக வீடு, கார், பங்கு பணம்) சொத்துகளாகும். திருமணத்துகு முன்னால் உங்களுக்கோ அல்லது உங்கள் கணவருக்கோ உரியவையாக இருந்து திருமண த்துக்குப் பின் விரிவுபடுத்தப்பட்ட சொத்துகளும் இதில் அடங்கும்.

## 1. ஜீவனாம்சம்

### மனைவி

நீதிமன்றம் கீழ்காண்பவற்றைப் பரிசீலனை செய்யும்

- கணவன் மனைவியாகிய உங்கள் இருவரின் சக்தியும் தேவையும்.
- எந்தளவுக்கு உங்களின் அல்லது உங்கள் கணவரின் நடவடிக்கை இந்த விவாகரத்துக்குக் காரணமாக உள்ளது.

நீங்கள் மறுமணம் செய்து கொள்ளும் வரையிலோ அல்லது வேறோர் ஆணுடன் வாழ்க்கை அமைத்துக் கொள்ளும் வரையி-லோ உங்களுக்கு ஜீவனாம்சம் பெறும் உரிமை உண்டு.

குறிப்பு: விவாகரத்தின் போது உங்கள் கணவர் உடல் ரீதியாகவோ மன ரீதியாகவோ வேலை செய்யும் ஆற்றலை இழந்திருந்தால் நீங்கள் அவருக்கு ஜீவனாம்சம் தரவேண்டியிருக்கும்.

### பிள்ளைகள்

நீங்கள் வேலை செய்பவராக இருந்தால், நீங்களும் உங்கள் கணவரும் உங்கள் பிள்ளைகளின் 21 வயது வரை அவர்களின் உடல் நிலை போன்றவற்றிற்குப் பொறுப்பேற்க வேண்டும். மாறாக, நீங்கள் வேலை செய்யா-திருந்தால் உங்கள் கணவர்தான் பிள்ளை-களுக்கு பொறுப்பேற்க வேண்டும். நீங்களோ உங்கள் கணவரோ பிள்ளைகளின் தேவைக் கேற்ப வாழ்க்கை படிச் செலவில்-மாற்றம் கோரும் வரை, நீதிமன்றம் முடிவு செய்திருந்த தொகையைத் தொடர்ந்து கொடுத்து வர வேண்டும்.

## 2 18 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கான பராமரிப்பும் பாதுகாப்பும்

### பராமரிப்பு உரிமை

- உங்கள் பிள்ளைகளின் நலனே நீதிமன்றத்-தின் முக்கிய நோக்கமாகும்.
- 7 வயதுக்கு கீழ்ப்பட்ட குழந்தைகளை உங்கள் பொறுப்பில் விடுவதே நலமென கருதப்படும்.
- உங்கள் பிள்ளைகளின் நலனுக்கு முக்கியத்-துவம் வழங்கும்போது நீதிமன்றம் கீழ்க்கா-ணும் விசயங்களைக் கவனத்தில் கொள்ளும்.

அ) உங்கள் பிள்ளைகள் (7 வயதுக்கு மேற்பட்ட-வர்களாக இருப்பின்) யாருடன் வசிக்க விரும்-புகிறார்கள் உங்களுடனா அல்லது உங்கள் கணவருடனா ?

ஆ) உங்கள் பிள்ளைகளின் தினசரி வாழ்க்கை-யில் பெரிய அளவிலான மாறுதல் ஏதும் ஏற்பட வாய்ப்புண்டா ?

இ) உங்களை, உங்கள் கணவரை அல்லது உங்கள் பிள்ளைகளை நேர்காணல் செய்த சமூக நலன் அதிகாரியின் அறிக்கை.

ஈ) உங்கள் பிள்ளைகள் அவர்களோடு ஒன்றாக வசிக்கும் தாத்தா-பாட்டி, மாமா-அத்தை, சின்னம்மா-சிற்றப்பா, பெரியம்மா-பெரியப்பா போன்றோர்களோடு கொண்டிருக்கும் நெரு-க்கம்.

உ) உங்கள் பிள்ளைகளின் பராமரிப்பு மற்றும் பள்ளி தேவைகளை நிறைவு செய்யும் பொறுப்பு

ஏ) சமய நம்பிக்கை

ஒரு வேளை பிள்ளைகளைப் பராமரிக்கும் பொறுப்பு உங்களிடம் வழங்கப்பட்டால் நீங்கள் உங்கள் கணவருக்குப் பிள்ளைகள் மீதான நியாயமான உரிமையை வழங்க வேண்டும். அவரும் அது போலவே நடந்து கொள்ள வேண்டும். இந்த உரிமை மீதான ஒரு நிலையான தீர்வை இருவரும் கலந்து பேசி முடிவு செய்து கொள்ளலாம்.

குறிப்பு: 18 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் பெரியோராக கருதப்படுவார்.

# விவாகரத்து
## ஜீவனாம்சம்
(முஸ்லிம் அல்லாதவருக்கு)